1970 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லே.

திரு. கே. விநயகம் : முனிசிபல் நிர்வாகத்திலே, போதுமான அளவுக்கு பணவசதி இல்லாத காரணத்தாலே, அதற்குத் தரப்பட வேண்டிய சலுகைகள் தரப்படவில்லே. ஒவ்வொரு வகுப்பறைக்கும் நடுவில் ஒரு "பார்ட்டிஷன்" இருக்க வேண்டுமென்றும், பள்ளிகள் பெண்களும், பிள்ளைகளும் ஒதுங்குவதற்கு வேறு இடம் இருக்க வேண்டுமென்றும் என்றெல்லாம் நிர்வாகக் குறிப்பிலே, கமிஷனர் ரிப்போர்ட்டிலே, வந்து இருப்பது உண்மையா? அல்லது அமைச்சரவர்கள் இப்போது பதில் சொன்னர்களே எந்தவிதமான குறைபாடுகளும் இல்லே என்று, இது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது அப்படி இல்லேயா என்று கேட்டார்கள். இல்லே என்று சொன்னேன். இப்போது 12 பள்ளிகள் இருக்கின்றன. அதற்கு சாமான்கள் வாங்க, பல்வேறு மேஜை நாற்காலி வாங்குவதற்கு 1,30,000 ரூபாய்க்கு ஆர்டர் வழங்கப்பட்டிருக்கிறது. 76,463 ரூபாய் களுக்கு சாமான்கள் வந்து சேர்ந்துவிட்டன. பிற சாமான்களும் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

Reclamation of ayacut lands under Parambikulam Aliyar Project

* 45 Q.—DR. H. V. HANDE: Will the Hon the Minister for Agriculture and Harijan Welfare be plased to state—

(a) whether there is any scheme for reclamation of ayacut lands under the Parambikulam-Aliyar project;

(b) if so, the area of the lands proposed to the reclaimed;

(c) whether any loans would be distributed to the farmers in the area; and

(d) the details thereof ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பகுதியின்கீழ் நிலங் களைப் பண்படுத்துதலுக்கான திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத் தில் பொள்ளாச்சி, உடுமலேப்பேட்டை, தாராபுரம், பல்லடம் வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) ஆம்.

(எ) அப்பகுதியிலுள்ள விவசாயிகள் பராதீனம் செய்வதற்கும் அடைமானம் வைப்பதற்கும், தங்களுக்கு உரிமையுள்ள தங்களது நிலங்களே அடைமானம் வைப்பதன் மீது ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 600 வரை அவர்களுக்குக் கடன் வழங்கப்படும். பணியை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றத்தையொட்டி இக்கடன்களேத் தவணைகளில் வழங்கப்படும். இதற்கென செலுத்தத் தக்க வட்டி வீதம் 7¾ சதவீதமாகும். முதல் இரண்டு ஆண்டுகளுக்குச் சேரும் வட்டித் தொகை இரண்டாவது ஆண்டின் இறுதியில் வசூலிக்கப்படும். கடன் தொகை மூன்ருவது ஆண்டிலிருந்து 8 சம தவணைகளில்

திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். எனவே, கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான மொத்தக் கால அளவு 10 ஆண்டுகளாகும்.

Dr. H. V. HANDE : For a long time a controversy has been going on in the Coimbatore area with regard to whether the Parambikulam-Aliyar water should be given for cultivation of dry crops or wet crops. Now that we are having extra water for the area, will the Government tell us whether they will allow the cultivation of wet crops in the area? What is the amount allotted for the scheme and what is the numbrr of acres to be benefited?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தப் பகுதியிலே இருக்கிற நிலப்பரப்பை பண்படுத்துவதற்காக இந்தத் திட்டம் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வகையில் 1 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பண்படுத்துவதற்காக 10 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவு செய்து பண்படுத்த வேண்டுமென்ற திட்டம் ஒன்று 1965-ம் ஆண்டிலேயே இருந்தது. படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. முதல் தவணையாக 75 ஆயிரம் ஏக்கருக்கு 3 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. இரண்டாவது தவணையாக 85,100 ஏக்கருக்கு 4 கோடியே 52 லட்சம் செலவு செய்யப்பட்டது. மூன்றுவது தவணையாக 32,000 ஏக்கருக்கு 190 லட்சம் அதாவது ஒரு கோடியே 90 லட்சம் செலவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

Dr. H. V. HANDE : May I know whether the Government is prepared to consider the request of the ayacutdars to declare the whole area as a wet crop area and give them facilities in the context of the new scheme?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இந்தத் திட்டம் "டிரை பிராஜக்ட்" ஆக ஏற்படுகிற திட்டம். இப்போது கொடுக்கின்ற தண்ணீர் ஏற்கனவே நாம் கொடுப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டு ஆயக்கட்டுகளுக்கு கிடைப்பதற்குத்தான் வாய்ப்பு இருக்கிறது.

It is too early to consider the question of allowing wet crops.

Programmes of Social Welfare Board

*46 Q.—Thiru K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the State Social Welfare Board has programmed to organise a wing to clean Madras City?—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம். நகர துப்புரவுப் பணியில் மகளிர் நலத்துறை அவ்வப்போது ஈடுபட்டு வருகிறது.

திரு. கே. சகாதேவ கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தைத் துப்புரவு செய்வதற்கு இனிமேல் இப்படிப்பட்ட திட்டம் ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.